மீண்டும்!
ஷகி
சலூன்
லேடிஸ் அன் ஜென்ஸ்
A. G. டாஸ்
596/2, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி
ஒழுங்கையில்,
யாழ்ப்பாணம்;

பக்கங்கள் நான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

ஆண், பெண் இருபாலாரும்
அழகுற சிகை
அலங்காரம் செய்வதற்கு
ஷகி
சலூன்
A. G. டாஸ்
596/2, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி
ஒழுங்கையில்,
யாழ்ப்பாணம்:

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 06 செவ்வாய்க்கிழமை (19 - 04 - 1994) UTHAYAN A Lively Natinoal Tamil Daily கதிர் 142

# சர்வசன வாக்கெடுப்பு ஒன்று நடத்தி தேர்தல்களை ஒத்திவைக்க திட்டம்!

## தோல்விகளைத் தவிர்ப்பதற்கு அமைச்சர் சிலர் யோசனை

கொழும்பு, ஏப்ரல் 19

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் ஏற்படக் கூடிய தோல்வியைத் தவிர்ப்பதற்காக, சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தி அதன் மூலம் மேற்படி இரு தேர்தல்களையும் ஒத்திவைக்க வேண்டும் என அரசில் உள்ள சக்திவாய்ந்த அமைச்சர்கள் சிலர் அரசுக்கு ஆலோசனை தெரிவித்திருக்கின்றனர்;

''சண்டே ஐலண்ட்'' பத்திரிகை இத்தகவலை வெளியிட்டிருக்கிறது:

ஆளும் ஐக்கிய தேசியக்கட்சியில் நிலவும் பூசல்களை முடிவுக்கு கொண்டு வரும் முயற்சிகளில் ஒன்றாகவும் —

எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி அடையவுள்ள நிச்சயமான தோல்வியைத் தவிர்ப்பதற்கும் —

இதுவே ஒரேவழி என்றும் அந்த யோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தலை எதிர் நோக்கத் தயக்கம் காட்டும் சில எதிரணி எம்.பிக்களும் இந்த யோசனைக்கு ஆதரவளிப்பார்கள் என்று இந்த யோசனைக்கு ஆதரவானவர்கள் நம்புகின்றனர்.

தற்போதைய தேர்தல் வாக்காளர் இடாப்புகள் எதிர் வரும் மே 27 உடன் காலாவதியாவதால் இந்த வாக்காளர் இடாப்பை பயன்படுத்தியே சர்வசனவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்த யோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டால் பெரும்பாலும் மே மாதத்திலேயே சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படலாம் என்றும் 'சண்டே

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மாதகலில் 'கிளைமோர்': படையினர் மூவர் காயம்

யாழ்ப்பாணம், ஏப். 19

மாதகல் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய கிளைமோர் தாக்குதலில் படையினர் மூவர் காயமடைந்தனர்.

பலாலி படைமுகாம் செய்தியை மேற்கோள்காட்டி 'த ஐலண்ட்' பத்திரிகை இத்தகவலை வெளியிட்டுள்ளது.

விடுமுறையில் செல்லும் இராணுவ அணிஒன்று பலாலி முகாமுக்கு வாகனம் ஒன்றில் சென்று கொண்டிருந்த வேளை இத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் —

காயமடைந்த படையினர் மூவரும் பலாலி இராணுவ ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருவதாகவும் அதில்மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

## படகுச் சேவை இன்று இல்லை நாளை நடக்கும்

யாழ்ப்பாணம், ஏப். 19

அன்னை பூபதியின் நினைவு தினம் இன்று அனுஷ்டிக்கப்படுவதை ஒட்டி கிளாலி — பூநகரி படகுச்சேவை இன்று நடைபெறமாட்டாது. இச்சேவை நாளை நடைபெறும் என விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (உ)

## கடந்த வாரம் திருமலையில் 20 பேர் கைது

யாழ்ப்பாணம், ஏப். 19

திருமலை மாவட்டம் உவர் மலைப் பகுதியில் ஆண்கள் பெண்கள் உட்பட 20 பேரை பொலீஸார் கடந்த வாரம் கைது செய்துள்ளனர்.

கண்ணகிபுரம், கோணேசர்புரம், துறைமுகக் கூட்டுத்தாபனப் பகுதி ஆகிய இடங்களில் திடீர் தேடுதல் நடத்திய பொலீஸார் இருபது பேரைக் கைது செய்ததாகவும் அவர்கள் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் செய்தி ஒன்று தெரிவித்தது. (உ-5)

## கைதிகளைப் பார்வையிட செஞ். அதிகாரி பலாலிக்கு!

யாழ்ப்பாணம், ஏப். 19

பலாலியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழர்களின் நலன்களை நேரில் பார்வையிட செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் தடுத்து வைப்போர் கண்காணிப்போர் பிரிவின் அதிகாரி திரு. அலஸ் நேற்று பலாலிக்கு சென்றுள்ளார்.

கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த இந்த அதிகாரி விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் உள்ள யுத்தக் கைதிகளை பார்வையிட்டார்.

பருத்தித்துறையில் இருந்து நேற்று காங்கேசன் துறை சென்ற அவர் இன்றும், நாளை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அன்னை பூபதிக்கு இன்று எழுச்சி பொங்க அஞ்சலி

யாழ்ப்பாணம், ஏப். 19

தியாகச் சுடர் அன்னை பூபதி, தமிழ் மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் தன்னுயிர் ஈந்த ஆறாவது ஆண்டு நினைவு நாள் இன்று தமிழீழப் பிரதேசம்எங்கும் உணர்வு பூர்வமாக எழுச்சியுடன் கொண்டாடப்படுகிறது.

கடந்த ஒரு மாத காலமாக, மிகப் பரவலாக ஆங்காங்கே நடைபெற்ற உண்ணாவிரத நிகழ்வுகள், சிரமதானங்கள், அஞ்சலிக் கூட்டங்கள் என்பன இறுதி நாளான இன்று களைகட்டுகின்றன.

கிராமம் கிராமமாக வீதிகள், முக்கிய சந்திகள், சனசமூக நிலையங்கள், பொது நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள், வீட்டு முன்றல்கள் தோறும் பலவித அலங்காரங்களுடன் வைக்கப்பட்டுள்ள அன்னை பூபதியின் திருவுருவப் படத்துக்கு மக்கள் பெரும் எண்ணிக்கையில் இன்று அஞ்சலி செலுத்துவர்.

இன்று பல்வேறு இடங்களில் இடம்பெறும் உண்ணாவிரத நிகழ்வுகளிலும் மக்கள் பல்லாயிரக் கணக்கில் பங்குபற்றுவர். கோட்ட, வட்ட மட்டங்களில் பல வகை அஞ்சலி நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன.

உண்ணாவிரதம், மற்றும் சிரமதான நிகழ்வுகளுக்குச் சிகரம் வைத்தாற் போல, இறுதி அம்சமாக யாழ். மாவட்டத்தில் கோட்ட ரீதியாக பொதுக் கூட்டங்கள் நடைபெற உள்ளன.

பொதுக் கூட்டங்கள் இடம் பெறவுள்ள இடங்களின் விவரம் வருமாறு:-

★ வலிகாமம் கோட்டம் (தீவகக் கோட்டத்துடனும், மட்டக்களப்பு, அம்பாறை தொடர்பகத்துடனும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு எதிரான பிரேரணை கடைசி நேரத்தில் ஒத்திவைப்பு

சென்னை, ஏப். 19

இந்தியாவில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடைமுறையில் இருக்கும் தடையை மேலும் இரண்டுஆண்டுகளுக்கு நீடிக்கும்படி மத்திய அரசுக்கு நெருக்கடி கொடுக்கும் பிரேரணை ஒன்று நேற்று தமிழ் நாடு சட்டசபையில் நிறைவேற்றப்பட இருந்தது.

ஆனால் ஆளும் கட்சியான அ. தி. மு. க. இப்பிரேரணையை சபையில்எடுப்பதை நேற்று கடைசி நேரத்தில் ஒத்திவைத்ததாக அறிவிக்கப்படுகிறது.

இப்பிரேரணை குறித்து அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் என்ற நேற்று அறிவிக்கப்பட்டது. (உ-த-5)

## இன்றும் நாளையும் மூடப்பட்டிருக்கும்

யாழ்ப்பாணம், ஏப். 19

அன்னை பூபதியின் நினைவு தினத்தை முன்னிட்டு இன்றும் நாளையும் அனுமதி வழங்கும் செயலகங்களும், குடும்ப அட்டை பகுதிச் செயலகங்களும், மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகமும், விசாரணைப் பகுதிச் செயலகமும் திறக்கப்பட மாட்டா என்பதை பொதுமக்களின் கவனத்திற்கு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் அறியத் தருகின்றனர். (த)

## வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டிருக்கும்

யாழ்ப்பாணம், ஏப். 19

அன்னை பூபதியின் நினைவு தினங்களின் இறுதி நாளான இன்று வர்த்தக விடுமுறை தினமாகும். வடபிராந்திய வர்த்தக சங்கங்களின் சமாசத்தின் கீழ் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் இன்று மூடப்பட்டிருக்கும் (த-162)

## வெளியூர் தபால்கள்

யாழ்ப்பாணம், ஏப். 19

வெளியூருக்கு தபால்அனுப்ப விரும்புவோர் அவற்றை நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு முன்னர் தபால் பெட்டிகளில் சேர்க்குமாறு யாழ். பிரதம தபாலதிபர் திரு சு கோடீஸ்வரன் கேட்டுள்ளார்.

வியாழக்கிழமை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படும் ''பிளாம்பயான்'' கப்பலில் தபால்கள் அனுப்பி வைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (த-17)

## அஷ்ரப் இன்று ராஜினாமா

கொழும்பு, ஏப். 19

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் இன்று நாடாளுமன்றம் கூடும் போது தமது எம். பி. பதவியை இராஜினாமா செய்வது பற்றிய அறிவிப்பை அங்கு விடுப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. [உ]

## எல்லாளன் படை மீண்டும் எச்சரிக்கை!

மணிலா, ஏப். 19

இலங்கை வரும் வெளிநாட்டு உல்லாசப்பயணிகளை தாம் படுகொலை செய்வோம் என்று ''எல்லாளன் படை'' மீண்டும்எச்சரிக்கை விடுத்துள்ளதாக வெரித்தாஸ் வானொலி நேற்று அறிவித்தது

இந்த எச்சரிக்கை அடங்கிய கடிதத்தை இலங்கையிலுள்ள பல சுற்றுலா மையங்களுக்கும் இக்குழு அனுப்பி வைத்துள்ளதாம்.

இதனையடுத்து இலங்கையிலுள்ள உல்லாசப் பயணிகள் ஹோட்டல்களுக்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-த)

## வெளிநாடு செல்வதற்கு அதிகாரிகளுக்கும் தடை!

### ஜனாதிபதி விஜேதுங்க உத்தரவு

கொழும்பு. ஏப் 19

அரச மற்றும் திணைக்களங்களின் உயர் அதிகாரிகளும் வெளிநாடு செல்வதற்கு ஜனாதிபதி விஜேதுங்கா தடைவிதித்துள்ளார்

அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் இத்தடை உத்தரவு அமுலுக்கு வரும் என்று ஜனாதிபதியின் செயலாளர் கே. எச். ஜே. விஜேதாஸ அமைச்சுகளின் செயலாளர்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளார்.

''அரசமைப்பு விதிகளின்படி ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் விரைவில் நடைபெறவுள்ளன. ஆகவே வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றுவதை துரிதப்படுத்தும்படி சகல அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் இதர அரச ஏஜன்ஸிகளை ஜனாதிபதி பணித்திருக்கிறார். தேர்தல் நடைமுறை ஆரம்பமாவதற்கு முன்னர் இப்பணிகள் முடிவுற வேண்டும். ஆகவே எல்லா அதிகாரிகளும் தேர்தல் முடியும்வரை நாட்டில் தங்கியிருக்க வேண்டும்.

தவிர்க்கமுடியாத சந்தர்ப்பங்களில் மட்டும் அதிகாரிகள் வெளிநாடு செல்ல அனுமதிக்கப்படுவர்'' - என்றும் ஜனாதிபதியின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதேபோன்ற தடை உத்தரவு ஒன்றை தமது கட்சி எம் பிக்களுக்கும், அமைச்சர்களுக்கும் ஜனாதிபதி விஜேதுங்கா ஏற்கனவே விடுத்திருந்தார் என்பது தெரிந்ததே. (உ-எ)

## புதிய நிவாரணத் திட்டம் மே தினத்தன்று அறிவிப்பு!

கொழும்பு, ஏப். 19

அரச, தனியார்துறை ஊழியர்கள், விவசாயிகள் மற்றும் மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டம் ஒன்றை அரசாங்கம் மே தினம் அன்று அறிவிக்கவுள்ளது.

அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள ''சண்டே ஒப்சேவர்'' பத்திரிகை இத்தகவலை வெளியிட்டுள்ளது.

விவசாயிகளுக்கு விசேட ஊக்குவிப்புத் திட்டம் ஒன்று மேதினம் அன்று வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

தொழிற்சங்கங்கள் ஏற்கனவே தெரிவித்த பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் விதத்தில் அரசின் நிவாரணத் திட்டம் இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

## என் கருத்துகள் மதிக்கப்படும் வரை நான் அரசுக்கு ஆதரவாக இருப்பேன்!

### டி.பியுடனான சந்திப்பின் பின் தொண்டா பேட்டி

கொழும்பு, ஏப். 19

எனது கருத்துகள் மதிக்கப்படும்வரை நான் அரசாங்கத்துக்கு ஆதரவாக உறுதியாக நிற்பேன்.

அமைச்சர் தொண்டமான் முன்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி விஜேதுங்காவுடன் நடந்த சந்திப்பை அடுத்து ''சண்டே ரைம்ஸ்க்கு'' அளித்த பேட்டி ஒன்றில் அவர் இவ்வாறு கூறினார்.

''அரசாங்கத்தைப் பலப்படுத்தும்படி கேட்டபோதெல்லாம் நான் உதவி வந்துள்ளேன். உதவி தேவை இல்லை என்றவிடத்து நான் அரசுக்கு நிர்ப்பந்தமாகப் போய் உதவ முடியாது.

ஜனாதிபதி விஜேதுங்காவைச் சந்தித்த பின்னர் சூழ்நிலை மாறிவிட்டது. எதிர்காலத்தில் தன்னிச்சைப் போக்கில்லாத சிநேகித அணுகு முறையையே எதிர்பார்க்கின்றேன்.

நான் சொல்வதற்கு செவிசாய்க்கப்பட்டு, எனது கருத்துகள் மதிக்கப்படும் வரை நான் அரசுக்குத் துணையாக

(4ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டா விருப்பப்படியே இ. தொ. கா. பூசலுக்குத் தீர்வு

கொழும்பு, ஏப். 19

தொண்டமான் — விஜேதுங்கா சந்திப்பை அடுத்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உட்பூசல் தொண்டமானின் விருப்பத்துக்கு இணங்கவே தீர்த்து வைக்கப்படக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

★மத்திய மாகாணசபையில் உள்ள எட்டு அதிருப்தி இ.தொ.கா. உறுப்பினர்கள் ராஜினாமாச் செய்ய வேண்டும்.

★ இ.தொ.கா பொதுச்செயலாளர் மற்றும் ராஜாங்க அமைச்சர் பதவிகளில் இருந்து எம். எஸ். செல்லச்சாமி ராஜினாமாச் செய்ய வேண்டும்.

—இவையே தொண்டமான் விதித்துள்ள நிபந்தனைகளாகும்.

இ.தொ.காவில் தொண்டமான் — செல்லச்சாமி நெருக்கடி தீர்க்க முடியாத ஒன்றாகி விட்டது என்ற சூழ்நிலையில் —

ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்கள் சிலருக்கும் செல்லச்சாமிக்கும் இடையே கடந்த திங்கட்கிழமை (நேற்று) பேச்சு வார்த்தை ஒன்று செல்லச்சாமி கேட்டதற்கிணங்க நடைபெறவிருந்தது. அது முக்கியமான ஒன்றாகக் கருதப்பட்டது.

இதனிடையில், இ. தொ. காவின் உட்பூசலுக்கு முடிவு காணுமுகமாக செல்லச்சாமியையும் தொண்டமானையும் தனித்தனியே சந்தித்துப் பேசுவதற்கு அரசமைப்பு விவகார அமைச்சர் கே.என். சொக்ஸி திட்டமிட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## செல்லாவை அங்கொடைக்கு அனுப்ப வேண்டுமாம்

### தொண்டமான் கூறுகிறார்

கொழும்பு, ஏப். 19

ராஜாங்க அமைச்சரும் இ தொ. கா. பொதுச் செயலாளருமான எம் எஸ். செல்லச்சாமியை அங்கொடைக்கு தான் அனுப்ப வேண்டும். இது என் கருத்து.

அமைச்சர் தொண்டமான் 'சண்டே ரைம்ஸ்'க்கு அளித்த பேட்டி ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சரவையில் இருந்து திரு. தொண்டமானை நீக்க வேண்டும் என்று கோரி ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு செல்லச்சாமி கடிதம் எழுதியிருப்பது பற்றி கருத்து வெளியிடும்போது திரு. தொண்டமான் முன்கண்டவாறு தெரிவித்தார்.

''செல்லச்சாமியின் இக் கோரிக்கை என்னை ஆச்சரியப்பட வைத்தது. இந்த ஏழை மனிதன் அமைதி மற்றும் அரசியல் சமநிலையையும் இழந்துவிட்டார்'' என்றும் அவர் கூறினார்.

செல்லச்சாமிக்கும் தமக்கும் இடையே மத்தியஸ்தம் செய்வதற்கு ஒன்றுமே இல்லை என்று கூறிய தொண்டமான் ''மலையகத்தில் உள்ள முழு இந்தியச் சமூகமுமே செல்லச்சாமியைப் பகிஷ்கரித்து வருவதாகவும் கூறினார். (ஒ-எ)

## முச்சந்தி முரளி



அப்ப அங்கொடையையும் கெடுக்கிற திட்டம் போலை......!

## ''வேண்டும் எனச் செய்யவில்லை!''

## தொண்டாவிடம் வருத்தம் தெரிவித்தார் ஜனாதிபதி!

கொழும்பு, ஏப். 19

''நான் உங்களை வேதனைப்படுத்தி இருந்தால் அதற்காக நான் வருந்துகின்றேன். அப்படிச் செய்யவேண்டும் என நான் நினைக்கவில்லை.

ஒரு வருட கால இடைவெளியின் பின்னர் அமைச்சர் தொண்டமானைச் சந்தித்த ஜனாதிபதி விஜேதுங்கா தொண்டமானிடம் முதலில் இவ்வாறு கூறினார்.

ஜனாதிபதி செயலகத்தில் இச்சந்திப்பு மாலை 6 மணிக்கு இடம்பெற்றது.

இரு தலைவர்களும் நேருக்கு நேர் சந்தித்து நடத்திய அப் பேச்சுக்களில் தொண்டமானின் பேரன் ஆறுமுகத்தைத் தவிர வேறு எவரும் இருக்கவில்லை.

இப்பேச்சுவார்த்தை தொடர்பான

[3 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

மேசைகள், சிறிய, பெரிய கட்டில்கள், அலுமாரி, மீன் தொட்டி, ஹோட்டல் சாப்பாட்டு மேசைகள் என்பன விற்பனைக்குண்டு. சி. நாதன், இல. 16/3, விதானையார் வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம். (30477)

நல்ல நிலையில் உள்ள சிறுவர்களுக்கான இரண்டு சைக்கிள்கள் உடன் விற்பனைக்கு உண்டு. 69A, கச்சேரி, நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (7322)

### காணி விற்பனைக்கு

மீசாலையில் இளம் தென்னங்கன்றுகளுடன் 11 பரப்பு, 9 பரப்பு, 12½ பரப்புகொண்ட மூன்று காணிகள் மா, பலா மரங்கள் அடங்கியவை விற்பனைக்குண்டு. தொடர்பு: S. K. குலசேகரம், 275, டச் வீதி, மீசாலை (யாழ். விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்திற்கு முன்பாக). (30474)

### இலகு திருமண சேவை

32 வயது, மகம், செவ்வாய் 8 கனிஷ்க தொழில்புரிபவருக்கு மணப்பெண் தேவை. Sponsor மூலம் அழைக்கலாம். தொடர்பு: ஞாயிறு, செவ்வாய் காலையும் புதன் மாலையும். விமலா, நாச்சிமார் கோயிலடி. (30471)

### சோதிடம்

பரீட்சையில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவசாயம் விருத்தியாகுமா? விவாகம் நடைபெறுமா? உங்கள் வினாக்களுக்கு உடனே விடை கிடைக்கும்! இன்றே கேட்டுப்பாருங்கள்!! த. சிவானந்தன், பிரபல சோதிடர், ஆனந்தா சோதிட நிலையம், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (முடமாவடிச் சந்தி) (30446)

### மணமகள் தேவை

கனடாவில் வங்கியில் தொழில் பார்க்கும் 30 வயது மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்பு: திருமதி எம். சி. சுப்பிரமணியம் 21/1 கலைப்புலவர் வீதி, யாழ்ப்பாணம். (7318)

### துளிர்

தமிழ்நாடு புதுவை அறிவியல் இயக்கம் இணைந்து வெளியிடும் சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ் விற்பனையாகிறது. வசந்தம் புத்தக நிலையம், சந்தா ஏற்றுக் கொள்ளப்படும். (7324)

### சூழலியல்

சூழலின் வரலாறு, அது எதிர்நோக்கும் பிரச்சினைகள், விளைவுகள், ஆபத்துக்கள் காப்பாற்றப்பட வேண்டிய அவசியம் எனப் பல விடயங்களை உள்ளடக்கிய நூல் விற்பனையாகிறது. வசந்தம் புத்தக நிலையம். (7323)

## பண்பாட்டு பவனி

யாழ்ப்பாணம், ஏப். 19

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு நடத்தும் பண்பாட்டுப் பவனியில் இன்று 19 ஆம் திகதி காலை 10 மணிக்கு நெடுங்கேணி மகா வித்தியாலயத்தில் பொய்க்கால் நடனமும் மாலை 5 மணிக்கு சின்னச்சாளம்பன் பெரியசாளம்பன் ஆலயத்தில் கிராமிய நிகழ்வும் இரவு 8 மணிக்கு முத்தையன் கட்டு அருணா 'வீடமைப்புத் திட்டத்தில் பொய்க்கால் நடனமும் இடம் பெறும்.

நாளை 20 ஆம் திகதி காலை 10 மணிக்கு விஸ்வமடு மகா வித்தியாலயத்திலும் இரவு 8 மணிக்கு புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்திலும் பொய்க்கால் நடனம் நடைபெறும். (ஏ)

## கண்ணீர் அஞ்சலி

### சுப்பிரமணியம் தனிநாயகம்

05-04-1994 இல் புங்குடுதீவில் காலமான திரு. சுப்பிரமணியம் தனிநாயகம் (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்கள் புங்குடுதீவு மத்தி பெருங்காடு ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையில் ஆரம்ப முதல் இறக்கும் வரை தன்னாலான சகல திருத்தொண்டுகளைச் செய்தது மட்டுமன்றி ஆலயத்தின் நிர்வாகத்திற்குப் பல வழிகளிலும் உற்ற துணையாக இருந்த அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டதும் நான் அதிர்ச்சி அடைந்து விட்டேன். அவருடைய தொண்டு நிறைவு பெற்றதனாலோ விநாயகர் அவரை ஆட்கொண்டு விட்டான். அவரின் ஆத்மா சாந்தியடைய வரசித்தி விநாயகர் அருள் புரிவாராக!

ஓம் சாந்தி!

கா. நித்தியானந்தன்,
(செயலாளர் புங்குடுதீவு, ஸ்ரீவர சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபை)

[30469]

## ஆலயங்களை சென்று பார்க்க இந்து குருமாருக்கு அனுமதி?

### அமைச்சர் பெற்றுத் தருவாராம்

வடக்கில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் அமைந்துள்ள இந்து வழிபாட்டுத் தலங்களை இங்குள்ள இந்து குருமார்கள் சென்று பார்வையிட வேண்டிய ஒழுங்குகள் செய்து தரப்படும்.

இந்து கலாசார அமைச்சர் திரு. பி. தேவராஜ் யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் செயலாளர் திரு. பா. சிவலோகநாதனிடம் முன்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடந்த 5ஆம் திகதி கொழும்பில் அமைச்சரைச் சந்தித்துப் பேசிய யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவைச் செயலாளர் குடாநாட்டில் உள்ள இந்து ஆலயங்களின் நிலை குறித்து அமைச்சரிடம் எடுத்துக் கூறினார்.

குடாநாட்டில் உள்ள இந்து மத பீடங்களைச் சேர்ந்தோரும், இந்துக் குருமாரும் இணைந்து படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள இந்து வழிபாட்டுத் தலங்களின் நிலையை பார்வையிட விரும்பினால் தாம் பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்டு அதற்கான அனுமதியைப் பெற்றுக் கொடுக்க முடியும் என அமைச்சர் தேவராஜ் தம்மிடம் கூறியதாக திரு. சிவலோகநாதன் தெரிவித்தார்.

கற்பூரம் உட்பட இந்து ஆலயங்களுக்குத் தேவையான பூஜைப் பொருள்களின்தேவை குறித்து இந்து மத குருமார் பட்டியல் ஒன்றைத் தயாரித்து வழங்கினால் அவற்றை வடக்கே எடுத்துச் செல்ல பாதுகாப்பு அமைச்சின் அனுமதியை பெற்றுத் தருவதாகவும் அமைச்சர் தேவராஜ் தெரிவித்துள்ளாராம். (உ-5)

## விசேட அதிரடிப்படையினர் சைக்கிள்களில் ரோந்து

அம்பாறை, ஏப். 19

கொழும்பில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்களைத் தொடர்ந்து அம்பாறையில் பல முக்கிய இடங்களில் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தடை முகாம்களில் சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. ஆண்களும் பெண்களும் நுணுக்கமாகச் சோதனையிடப்படுகின்றனர்.

அக்கரைப்பற்றுப் பகுதியில் விசேட அதிரடிப்படையினர் சைக்கிள்களில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதைக் காண முடிகிறது. (ஓ)

வண்ணை ஸ்ரீ

## வீரமாகாளி அம்மன் ஆலய மணவாளக் கோல விழா

### (கும்பாபிஷேக தினம்)

19 – 04 – 1994 செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்கு, சங்காபிஷேகமும், பிற்பகல் 3-00 மணிக்கு வசந்த மண்டப பூஜையும் தொடர்ந்து சிவஸ்ரீ ஆறுமுகக் குருக்கள் தலைமையில் அம்பாளுக்கு ஒன்பது குருக்கள் பங்குபற்றும்;

நவசக்தி

அர்ச்சனையும் நடைபெறும்,

தொடர்ந்து

ஸ்ரீ. உதயகுமார் குழுவினர்

T. உதயசங்கர் குழுவினர்

ஆகியோரின் மங்கல ஒலி முழங்க அம்பாள் பூந்தண்டிகையில் வீதி உலா வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பாள்.

- திருவிழா உபயகாரர்.

திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்:

E. S. பேரம்பலம் & சன்ஸ்
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

[30475]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### அளவையூர் நாகமுத்து அரியகுட்டி

தோற்றம்: 14 – 01 – 1918

மறைவு: 20 – 03 – 1994

அன்பின் இருப்பிடமே! அருளின் தாயகமே! அப்பா; தங்களின் ஆண்டு முதிர்ந்தாலும்; அறிவு தளராது அன்றலர்ந்த செந்தாமரை போல நின்ற முகம் வாடித் திங்கள் ஒன்றானாலும், தங்கள் பாச நினைவலைகள் படருதையா எம் மனதில், தங்கள் ஆன்மா சாந்திபெற வேண்டிநிற்கும்:

வாழ்க்கைத்துணை பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர் அன்பிற் கினியோர் அனைவரும்.

''கணேஸ்வரம்''
அளவெட்டி. (7076)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்வியியற்துறைத் தலைவர்
பேராசிரியர் வ. ஆறுமுகம்
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி வல்லிபுரம் செல்லாச்சி

அவர்களின் மறைவிற்கு
எமது கண்ணீர் அஞ்சலிகள்.

அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கல்விக் கழகம்,
கல்வியியற்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

[30478]

# தியாகச் சுடர் அன்னை பூபதியின்
# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



மய நாட்டின் சதிக்கு எதிராக
இனவாத ஒடுக்கு முறைக்கு எதிராக
தமிழீழத்தின் உரிமைக்கு – தியாக தீபத்தின் வழி நின்று
உலகையே வியக்க வைத்த – தியாகச்சுடர் அன்னைபூபதி

வெளியீடு; யாழ். மாவட்ட அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் சார்பில்

## யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபை

(சி-7756)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
192/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

## அன்னையின் பல் பரிமாணம்

தியாகச்சுடர் அன்னை பூபதியின் ஆறாவது நினைவு நாள் தமிழீழப் பிரதேசம் எங்கும், மக்களால் இன்று உணர்வுபூர்வமாகக் கொண்டாடப்படுகிறது. ஈழத் தமிழ் மக்களின் விடுதலை வேள்வியில் தன்னை ஆகுதியாக்கிக் கொண்ட அன்னை, அவர்களின் அரசியல் போராட்டத்தின் பல பரிமாணங்களின் வடிவமாகத் திகழ்ந்தார்.

ஒரு சாதாரண தமிழ்த் தாயின் சுதந்திரதாகம் எந்தளவுக்கு சுடர்விட்டுப் பிரகாசிக்கிறது என்பதனை அன்றைய இந்தியாவுக்கு மட்டுமல்ல, ஸ்ரீலங்கா அரசுக்கு மட்டுமல்ல அனைத்து உலகத்துக்குமே உணர்த்தியது அவரது பல்பரிமாண வடிவங்களில் ஒன்று.

மனித வாழ்க்கையில் மதிப்பிடற்கரிய சொத்தான உயிரைத் தியாகம் செய்தேனும் தங்கள் அடிமை விலங்கை உடைத்தெறிவதற்கு தமிழ் இளைஞர், இளம் மகளிர் மட்டுமன்றி, அவர்களின் தாய், தந்தையரும் தயாராக இருக்கிறார்கள் என்பது அன்னை பூபதி முன்னிறுத்திய இன்னொரு வடிவம்.

இந்தியாவானால் என்ன, [illegible] வல்லரசானால் என்ன, ஆயுத பலத்தைக் காட்டி ஈழத்தமிழ் மக்களை அவர்களின் சுதந்திர இலக்கில் இருந்து திசை திருப்பவோ அல்லது வேறு விதமாகவோ தகர்த்த முடியாது என்பதனையும் அன்னை பூபதியின் தியாகம் வரலாற்றுப் பதிவாக்கிவிட்டது.

தமிழ் மக்களின் மனோபலம் ஆயுதபலத்தினாலோ அல்லது வேறுவித அழுத்தங்களினாலோ உடைக்கக் கூடியது அல்ல என்பதனையும் அன்னை பூபதி உலகத்துக்கு உணர்த்தி தமது உயிரை ஈகம் செய்தார்.

இவற்றுக்கு மேலதிகமாக, ஈழத் தமிழர்களை இரட்சிக்கப் போவதாக வேடம் போட்டு, அவர்கள் மண்ணில் கால் பதித்த இந்தியா தனது வல்லாதிக்கத்தை நிலை நாட்டுவதற்காகத் தமிழர்களின் நலனைப் பலியிட்டது என்பதனை அம்பலப்படுத்திய பெருமை தியாகி திலீபனைப் போல அன்னை பூபதிக்கும் உண்டு.

அன்னை பூபதியின் அறைய தியாகமும், மனோபலமும், இலட்சியப் பற்றும் விடுதலை இலக்கும் [illegible] வருடங்களுக்கு முந்திய இந்தியாவுக்கு மட்டும் சவாலாக அமையவில்லை. இன்றைய இந்தியாவுக்கு ஒரு படிப்பினையாகவும் [illegible] அதற்கும் மேல [illegible] மூர்களுக்கு [illegible] கிடைக்கும் வரை [illegible] அரசுக்கும் [illegible] [illegible] இந்தியா [illegible] தமிழர் [illegible] சோதனை செய்து கொண்டு, இழைத்த தவறை உணர்ந்து, அந்தத் த[illegible]க்குப் பிராயச்சித்தம் செய்யுமா?

ஈழத் தமிழர்களின் விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகளை மையமாகக் கொண்டே தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று முன்னாள் வெளியுறவுச் செயலாளர் டிக்ஸிற் தெரிவித்த யோசனையைக் கவனத்தில் எடுத்து—

தமிழர்களின் விடுதலைக்கு முதலிடமும் இந்திய நலனுக்கு இரண்டாம் இடமும் கொடுத்து தார்மீக ஆதரவு வழங்குவது குறித்து இந்தியா பரிசீலனை செய்யலாம்.

ஈழத்தமிழர்கள் தமக்கென ஒரு நாட்டை, அரசை நிறுவுவதால் அதன் தாக்கம் இந்தியாவைப் பாதிக்கும் என்று அச்சம் கொள்வதை அது நிறுத்திக்கொள்ள வேண்டும்.

பங்களாதேசத்தை உருவாக்க இந்தியா துணையாக இருந்த போது, மேற்கு வங்காளம் உடைந்து தனி நாடாகி விடும் என்று இந்திராகாந்தி அஞ்சினாரா?

பாகிஸ்தானும் ஸ்ரீலங்காவும் மிகமிக நெருக்கமாகி வரும் பின்னணியில், ஈழத் தமிழருக்கு தார்மீகமாக உளமார உதவுவது குறித்து இந்தியா ஏன் மறுபரிசீலனை செய்ய முடியாது?

இலங்கையில் ஸ்ரீலங்காவா அல்லது தமிழீழமா தனக்கு நல்ல நண்பனாக விளங்க முடியும் என்பதை தீர்மானிக்க இந்தியாவுக்கு இன்னும் காலம் பிந்திவிடவில்லை.

---

அம்பாறை மாவட்டத்தில்

# தமிழ் - முஸ்லிம் பகுதிகளில் அதிரடி படை விலகிச்செல்லும்

## பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு பொலீஸார் பொறுப்பு

அம்பாறை, ஏப். 19

அம்பாறை மாவட்ட தமிழ் - முஸ்லிம் பிரதேசங்களில் அதிரடிப் படையினரின் பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்பட்டு—

இப் பிரதேசங்களின் பாதுகாப்புப் பொறுப்பை பொலீஸாரிடம் ஒப்படைப்பதற்கான ஏற்பாடுகள் துரிதகதியில் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் ஆரம்ப நடவடிக்கையாக அப்பகுதிகளில் இயங்கி வந்த சில அதிரடிப் படை முகாம்கள் விரைவில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு மாற்றப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஈழம் போர் II ஆரம்பமானதை அடுத்து அம்பாறை மாவட்டத்திற்கு அதிரடிப் படையினர் அனுப்பப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில், அம்பாறை மாவட்டத்தில் காரைதீவிலும் மல்வத்தையிலும் திருக்கோவிலிலும் உள்ள அதிரடிப் படை முகாம்கள் தொடர்ந்தும் இயங்க விருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஓ)

# பிரேமா நினைவாக வைபவங்கள் அமைச்சர் சிலருக்கும் அழைப்பு!

## ஹேமா முடிவில் மாற்றம்

கொழும்பு, ஏப். 19

மறைந்த பிரேமதாஸாவின் நினைவாக அவர் தனது அரசியல் வாழ்வை ஆரம்பித்த சுசரித்த வாசஸ்தலத்தில் நடத்தப்படவுள்ள மத வைபவங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட சில அமைச்சர்களை அழைப்பதற்கு ஹேமா பிரேமதாஸா முடிவு செய்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அவ்வாறு அழைக்கப்படுபவர்களில் இ. தொ. கா. தலைவரும் அமைச்சருமான தொண்டமான், நாடாளுமன்ற சபை முதல்வரும் அமைச்சருமான விஜேபால மெண்டிஸ், அமைச்சர்கள் காமினி அத்துக்கோறள, ஏ. எம். எஸ். அதிகாரி ரேணுகா ஹேரத் ஆகியோர் இடம் பெறுவார்கள் என்று "சண்டே ரைம்ஸ்" தகவல் வெளியிட்டிருக்கிறது.

பிரேமதாஸாவின் புதல்வர் சஜித் இவ்வாரம் தொலைபேசி மூலம் இந்த அமைச்சர்களுக்கு அழைப்பு விடுக்கவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசு நடத்தும் பிரேமா நினைவு வைபவங்களில் பிரேமா குடும்பத்தினர் கலந்து கொள்வதில்லை என்று ஏற்கனவே முடிவு செய்துள்ளது தெரிந்ததே.

தாம் நடத்தும் மத நிகழ்ச்சிகளுக்கு நெருங்கிய உறவினர் மற்றும் நண்பர்களை மட்டுமே அழைப்பதற்கு ஹேமா முன்னர் முடிவு செய்திருந்தார் என்றும்—

இப்போது அதனை மாற்றி சில அமைச்சர்களை அழைக்கத் தீர்மானித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

[உ-ஏ]

## புலிகளின் குரல் வானொலியில்

19-04-1994

செவ்வாய் இரவு

★ 8-01 — அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி — "தியாகத் தாய்" இசைச்சித்திரம்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — கருத்துக்களம் "திருகுதாளம்"
★ 8-50 களமும் காலமும் "ஏங்கும் விழிகள் சிரிக்கும்"

20-04-1994

புதன் காலை

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-45 — செய்திகள்
★ 7-50 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-55 — தாயகப் பாடல்

# பிரேமதாஸாவின் சிலைக்கு மலரஞ்சலி செய்ய அழைப்பு

## அனைத்துக் கட்சிகளுக்கும் கடிதம்

கொழும்பு, ஏப். 19

மே தினமன்று கொழும்பு ஹல்ஸ்டோர்பில் திரை நீக்கஞ் செய்யப்படும் பிரேமதாஸாவின் சிலைக்கு மலரஞ்சலி செலுத்தும்படி அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிப் பொதுச்செயலாளர் சிறிசேன கூரே கடித மூலம் அழைப்பு விடுத்திருக்கிறார்.

மே முதலாம் திகதி காலை 8 மணிக்கு சிலை திரைநீக்கம் இடம் பெறவுள்ளது.

(ஓ-எ)

# பிரேமதாசா குடும்பம் எதிரணியை ஆதரிக்கும்?

கொழும்பு, ஏப். 19

இவ்வாண்டு இறுதியில் நடைபெறவுள்ள தேர்தல்களின் போது எதிரணியை ஆதரிப்பது பற்றி காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாஸாவின் குடும்பத்தினர் பரிசீலனை செய்து வருகின்றனர்.

ஹேமா பிரேமதாஸாவுக்கு நெருங்கிய வட்டாரங்களை மேற்கோள் காட்டி "சண்டே ரைம்ஸ்" இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியினால் புறக்கணிக்கப்பட்ட இக் குடும்பத்தினரின் ஆதரவைப் பெறுவதில் எதிரணிக் கட்சிகள் ஈடுபட்டுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

"வாக்குகளைப் பொறுத்த வரையில் எமது பலம் தொண்டமானின் வாக்கு வங்கியிலும் பார்க்க கூடியது"— என்று பிரேமதாஸாவின் மகன் சஜித் தனது நண்பர்களிடம் கூறிவருகிறார் என்றும் "சண்டே ரைம்ஸ்" செய்தி வெளியிட்டிருக்கிறது.

பிரேமா குடும்பத்தினரின் ஆதரவைப் பெறுவதில் ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும் முயற்சித்து வருவதாகக் கூறிய சஜித் பிரேமதாஸா —

"எம்மை ஐ. தே. கவில் சேரும்படி சில அமைச்சர்கள் கேட்டுள்ளார்கள். ஆனால் சுதந்திரக் கட்சியோ மிகத் திட்டவட்டமான யோசனைகளைத் தெரிவித்துள்ளது. இன்னும் சுதந்திரக் கட்சி எம்முடன் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தவில்லை"— என்றும் தமது நண்பர்களிடம் கூறியுள்ளார்.

(உ-ஏ)

# பிரதான கட்சிகளுக்கு தீர்வில் அக்கறையே இல்லை

## புத்திஜீவிகள் மத்தியில் புரிந்துணர்வு

கொழும்பு, ஏப். 19

"இலங்கை இன்று எதிர்நோக்கும் பாரிய நெருக்கடியான இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதில் ஆளும் ஐ. தே. கட்சிக்கோ எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கோ அல்லது தென்னிலங்கையின் முக்கிய அரசியல் கட்சிகளுக்கோ அக்கறையே இல்லை.

இக்கட்சிகள் தீர்வினைக் காண அர்த்தமுள்ள முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதில் தமிழர் விடுதலைக் கூட்டணி நம்பிக்கை இழந்து விட்டது" என்று அதன் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் தெரிவித்திருக்கிறார்.

"தென்னிலங்கையைச் சேர்ந்த புத்திஜீவிகள், கல்விமான்கள், சில சுயேட்சை அரசியல் வாதிகள் மத்தியில் சிறுபான்மை இனங்களின் பிரச்சினைகள் குறித்து ஒரு புரிந்துணர்வு ஏற்பட்டு வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது" என்றும் அவர் கூறினார்.

அரசாங்கத் தீர்வுக்கோ, தென்னிலங்கை முக்கிய கட்சிகளுக்கோ இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் ஆவலே கிடையாது. அவற்றிடம் இதற்கான எந்தவித திட்டமோ ஆயத்தமோ இல்லை என்று குறிப்பிட்ட அவர் தென்னிலங்கையில் தற்போது உருவாகி வரும் புதியதொரு சக்தி குறித்து ஒரு நம்பிக்கை ஒளி பிறந்திருக்கிது"— என்றார்.

(ஓ)

# "பிளாம்பயன்" வந்து திரும்பும்

யாழ்ப்பாணம், ஏப். 19

செஞ்சிலுவைச் சங்க [illegible] தேசக் குழுவின் ஏற்பாட்டில் திருகோணமலைக்கும், பருத்தித்துறைக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் 'பிளாம்பயான்' கப்பல் ஒரு தொகுதி பயணிகளுடன் நாளைமறுதினம் வியாழக்கிழமை பருத்தித்துறைக்கு வரவிருக்கிறது.

கொழும்பில் சிகிச்சை பெற்றுத் திரும்புவோருடன் வரும் இக்கப்பல் கொழும்பு செல்லும் அவசர நோயாளர்களை ஏற்றிக் கொண்டு திருகோணமலை திரும்பும்.

(உ-ஏ)

# அன்னையின் தியாகம் தேசிய இன எழுச்சியின் வெளிப்பாடு

தமிழீழ மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் அன்னை பூபதி தன் இன்னுயிரை ஈர்ந்த நாள் இன்று ஆகும்.

1988ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8-45 மணிக்கு அவர் தேசத்தின் அணையாத தீபமானார்.

அவர் தனது அகிம்சைப் போராட்டத்தில் தன்னை தற்கொடையாக்கி 6 வருடங்கள் இன்று கழிந்து விட்டன.

இந்த 6வருட காலத்தில் போராட்டம் பெரும் வளர்ச்சியும் எமது மக்கள் மனங்களில் அணையாத சுதந்திரச் சுடராக நிலைத்து விட்டது.

அன்னை பூபதியின் போராட்டம் ஒரு தனிப்பட்ட பெண்ணின் உள்ளத்தில் எழுந்த கொதிப்பு அல்ல. ஒரு தேசிய இனத்தின் சுதந்திர எழுச்சியின் வெளியீடு.

மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் —

எமது தாயகப் பூமியின் மூலை முடுக்குகளில் எல்லாம் இந்திய இராணுவத்தின் ஆதிக்கச் சுவடுகள் பதிந்திருந்த வேளையில் —

சாதாரண மக்கள் எவரும் போராடத் துணியாத நேரத்தில் — அன்னை பூபதி தனது போராட்டத்தை நடத்தினார்.

இந்திய அமைதிப்படை எமது மண்ணில் காலடி எடுத்து வைத்து மக்களை அழித்துப் போராட்டத்தை நசுக்கிக் கொண்டிருந்த வேளை அவர் தனது அறப் போரை ஆரம்பித்தார்.

ஒரு புறம் மக்களின் கரை கடந்த உற்சாகம் மறுபுறம் மனித ஜீவனைக் காப்பாற்ற வேண்டும் என்ற வைத்தியர்களின் வாஞ்சை இடையே உண்ணா நோன்பைக் குழப்பியடிக்கும் இந்தியப் படையினரின் தந்திரம் இத்தனைக்கும் மத்தியில் அன்னைபூபதி தனது இலட்சியத்தை நிறைவேற்றினார்.

31 நாட்கள் அவரின் சத்தியப் போர் தொடர்ந்தது 32ஆவது நாளில் அவர் மீளாத் துயிலில் ஆழ்ந்தார்.

அன்னையின் பூவுடலை சூட்டோடு சூடாக அப்புறப்படுத்தி அழித்து விடுவதற்கு இந்தியப் படையினர் போட்டிருந்த திட்டமும் மக்களின்



தாயகத்தின் விடுதலைக்காக தன்னை ஆகுதியாக்கிய தியாகச் சுடர் அன்னை பூபதி மீளாத் துயில் கொள்ளும் காட்சி.

அடைந்து தற்போது அடுத்தடுத்து பல வெற்றிகளை ஈட்டி வருவதற்கு அன்னை பூபதியின் உயிர்த் தியாகமும் ஓர் உந்து சக்தி என்பதில் சந்தேகம் இல்லை.

★ தமிழ் மக்கள் மீது இந்திய ராணுவம் மேற்கொண்ட யுத்தத்தை உடன் நிறுத்த வேண்டும்.

★ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

இந்த இருகோரிக்கைகளை முன் வைத்து சாகும் வரை உண்ணா விரதம் ஆரம்பித்தவர் அன்னைபூபதி.

அவரது தியாகம் என்றென் உணர்வலைகளால் அன்று முறியடிக்கப்பட்டது.

அன்னை பூபதி கால வெள்ளத்தால் அழியாத ஒரு தனிச் சரித்திரம்.

விடுதலைப் போராட்டத்துக்காக உண்ணாவிரதம் இருந்து உயிர்த்தியாகம் செய்த உலகின் முதலாவது பெண். அவரை நினைவு கூரும் இப்புனித நாளில் எமது விடுதலைப் போராட்டத்தில் எமக்குள்ள தேசிய கடமையை உணர்ந்து அனைவரும் போராட்டத்தில் முனைப்புடன் செயற்படுவோம்.

(இ)

# அன்னை பூபதி நினைவுப் போட்டி

யாழ்ப்பாணம், ஏப். 19

அன்னை பூபதி நினைவு பொது அறிவுத் தேர்வில் தேசிய, கோட்ட மட்டங்களில் சிறப்புத் தேர்ச்சிபெற்ற மாணவர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

தேசிய மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் பெயர் விவரம் முறையே வருமாறு:

ஆண்டு 6

செபஸ்தியாம்பிள்ளை ஜெபர்சன் (முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரி), காயத்ரி சத்தியசீலன் (ஞானசாரியார்), தமிழினி இராமச்சந்திரன் (வல்லை இந்து த. க. பா.)

ஆண்டு 7

ஜெயானந்தரூபி ஜெகசோதிநாதன் (வேம்படி ம. க.), யோகேஸ்வரன் திவாகர் (மானிப்பாய் மெமோறியல் ஆ. பா.), ஜேசுதாசன் அன்ரனி றேகன் (வ/ திறந்த நிவாரண பா.).

ஆண்டு 8

அ. பார்த்திபன் (யா. இந்துக் கல்லூரி), கல்பனா நேசராஜா (யா. செஞ்சோலை ம. பா.), சுகந்தினி கணபதிப்பிள்ளை (யா. திறந்த நிவாரண நிலைய பா.).

ஆண்டு 9

மகேந்திரராசா பிரவீணன் (தெல்லிப்பளை யூனியன் க.), துரைராசா நந்தகுமார் (அச்சுவேலி சரஸ்வதி வி.), சுப்பிரமணியம் சுரேஸ்காந் (வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா).

ஆண்டு 10

சாந்தரூபி செல்வராசா (அம்பன் அ. மி. த. க. பா), பிரேமலதா இராசேந்திரம் (உடுத்துறை ம. வி.), முத்துலிங்கம் மதிமாறன் (மகாஜனா க.).

ஆண்டு 11

துரைராசா பிரசாந்தன் (யா. இந்து க.), துஷ்யந்தினி பொன்னுத்துரை (சங்கானை சிவப்பிரகாச ம. வி.), சாந்தலிங்கம் செந்தில்குமார் (ஸ்கந்தவரோதயக் கல்லூரி).

ஆண்டு 12, 13

மகாலிங்கம் அரவிந்தன் (யா. இந்துக் க.), [illegible] (யா. இந்து [illegible]), [illegible] பளை ம. வி.).

## கோட்ட மட்டத்தில் பரிசு பெறுவோர்

வேலணை

ஆண்டு6 நடராசா கிருஷ்ணராஜ் - புங்குடுதீவு சிறீ சித்தி விநாயகர் வித்தி.

ஆண்டு 8 பாலாம்பிகை கணேசையா - மண்கும்பான் அ. த. க. பா.

ஆண்டு 9 சிவனுஷா கதிரவேலு - வேலணை சரஸ்வதி வித்தி.

ஆண்டு 11 ஆகஸ்ரின் கொன்பியூசியஸ்-மண்டைதீவு றோ. க. பா.

ஆண்டு 11 ஆரோக்கியநாதர் கோகுநாதன் - மண்டைதீவு றோ. க. பா.

ஆண்டு 12 ரூபகௌரி சிவராசா - மண்டைதீவு ம. வி.

ஆண்டு 12 இரத்தினசிங்கம் தற்பரன் - வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி ம. வி.

ஊர்காவற்றுறை

ஆண்டு 8 சைலஜா கதிரேஸ்வரன் - நாரந்தனை கணேச வித்தி.

ஆண்டு 8 தங்கவேல் சிவரூபன் - யாழ்ரன் கல்லூரி

ஆண்டு 9 நகுலேஸ்வரி இலட்சுமணன் - நாரந்தனை கணேச வித்தி.

ஆண்டு 10 பாலேஸ்வரி இராசரத்தினம் - நாரந்தனை கணேச வித்தி.

ஆண்டு 10 நாகன் மணிமாறன் - நாரந்தனை கணேச வித்தி.

ஆண்டு 11 டெமேந்தி ஜேசுராசன் - நாரந்தனை கணேச வித்தி.

சங்கானை

ஆண்டு 7 சிறீ பாலச்சந்திரன் சிறீ சங்கர்- வட்டு. திருஞானசம்பந்த வித்தி

ஆண்டு 8 இராஜசிங்கம் பிரசாந்தன் - வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி.

ஆண்டு 8 தங்கராசா பிரபாகரன் - சுளிபுரம் விக்டோரியாக் கல்லூரி.

ஆண்டு 11 ஹரப்பிரியா சிவதட்சணாமூர்த்தி - சங்கானை சிவப்பிரகாச வி.

ஆண்டு 12 சிவசுப்பிரமணி [illegible]கநேசன் வட்டு. இந்துக் கல்லூரி.

ஆண்டு12 வடிவேல் வடிவழகையன் வட்டு. இந்துக் கல்லூரி.

பளை

ஆண்டு 6 தர்சினி வேதநாயகம் - பளை றோ. க. த. க. பா.

ஆண்டு 11 சிவானந்தம் விஜயசிரி - பளை ம. வி.

ஆண்டு 12-13 தியாகராஜா சஜீவன் - பளை ம. வி.

தென்மராட்சி

ஆண்டு 6 விவேகானந்தன் கோகுலன் - மகளிர் ம. வி. சாவகச்சேரி.

ஆண்டு 6 தயாதேவி தங்கராசா - மட்டுவில் தெற்கு சரஸ்வதி கனிஷ்ட வி

ஆண்டு 7 சுகந்தி தங்கவேல் - மந்துவில் றோ. க. த. க. பா.

ஆண்டு 7 குகதாசன் தயாளன் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி

ஆண்டு 8 செஞ்சோலை மகளிர் பாடசாலை தேவிகா ஐயாத்துரை.

ஆண்டு 8 சஞ்சிகா சந்தையா செஞ்சோலை மகளிர் பாடசாலை.

ஆண்டு 8 ரோகினி சந்தையா - மகளிர் ம. வி. சாவகச்சேரி

ஆண்டு 9 பிரபாவ செல்லத்துரை - மந்துவில் றோ. க. த. க. பா.

ஆண்டு 10 - நடராஜா அருள்வேல் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

ஆண்டு 11 தனபாலன் ரஞ்சித்குமார் - சந்திரபுர ஸ்கந்தவரோதய ம. வி

ஆண்டு 11 குலசேகரம் ஹரிதாஸ்தனன்-டிரிபேக் கல்லூரி

ஆண்டு 12-13 நடராத்தினராசா மஞ்சுதன் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி

ஆண்டு 12-13 சிவனத்தம்பி செந்தில்குமரன் - டிபேக் கல்லூரி.

மருதங்கேணி

ஆண்டு 6 முத்துவேல் விஜயகுமார் - குடத்தனை கரையூர் றோ. க. த. க. பா.

ஆண்டு6 தேவரட்ணம் விஜயரட்ணம் - குடத்தனை கரையூர் றோ. க. த. க. பா.

ஆண்டு 6 அருளானந்தம் குகதாசன் - வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வி

ஆண்டு 6 புவிபவிசியா கணபதிபிள்ளை - வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வி.

ஆண்டு 7 சசிமிளா ஆனந்தராஜா - வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தி.

ஆண்டு 7 அல்பிரட் தங்கராஜா டெலின்யூபின் - வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா.

ஆண்டு 8 மேரி அனுஸ்ரா அருளானந்தம் - வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா.

ஆண்டு 8 கிரேஸ் புஸ்பம் ஜெரிஸ்ரன்பெனடிற் - வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா.

ஆண்டு 10 முத்தையா சந்திரலிங்கம் - வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா.

ஆண்டு 10 செல்வராஜா செல்வரஞ்சினி - உடுத்துறை ம. வி.

ஆண்டு 11 பொன்னம்பலம் இலட்சியவதனி - உடுத்துறை ம. வி.

ஆண்டு 11 ஆண்டிஐயா குமுதினி - உடுத்துறை ம.வி.

ஆண்டு 11 முத்துராஜா சிவாஜினி - உடுத்துறை ம.வி.

ஆண்டு 12 சோமலிங்கம் விக்னேஸ்வரன் - உடுத்துறை ம. வி.

ஆண்டு 12 முத்துலிங்கம் சுதாசன் - உடுத்துறை ம.வி.

கரவெட்டி

ஆண்டு 6 தமிழினி இராமச்சந்திரன் - வல்வெட்டி இ. த. க. பா.

ஆண்டு 8 குமுதா யோகலிங்கம் - வல்வெட்டி இ த. க பா.

ஆண்டு 8 கமலினி [illegible]சரநாதன் - வல்வெட்டி இ த. க. பா.

ஆண்டு 9 குணாநிதி நடராசா - வல்வெட்டி இ த. க பா.

ஆண்டு 10 சுப்பிரமணியன் ஞானசுகிர்தன் - நெல்லியடி ம. ம. வி

ஆண்டு 10 பசோதிபதிதன் - ஞானசாரியர் கல்லூரி

ஆண்டு 10 பானு இ பாலசுப்பிரமணியம் - ஞானசாரியார் கல்லூரி

ஆண்டு 11 சரியநாயகம் தயாபரன் - உடுப்பிட்டி அ மி. கல்லூரி

ஆண்டு 11 நாகலிங்கம் கமலஸ்கான் - உடுப்பிட்டி அ.மி. கல்லூரி.

ஆண்டு 12 சிவஜினி சவானந்தம் - நெல்லியடி ம.ம.வி.

ஆண்டு 12 - உடுப்பிட்டி அ. மி. கல்லூரி.

பருத்தித்துறை

ஆண்டு 6 சண்முகநாதன் ஜனகன் - ஹாட்லிக் கல்லூரி.

(4ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். ஆஸ்பத்திரிக்கு 27 பயிலுநர் டாக்டர்கள்

யாழ்ப்பாணம், ஏப். 19
யாழ். போதனா வைத்திய சாலைக்கு 27 பயிலுநர் டாக்டர்கள் இம்மாத இறுதிக்குள் நியமனம் பெறுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் இருந்து இவ்வாண்டு சித்தியடைந்த 45 பேரின் பட்டியல் சுகாதார மகளிர் விவகார அமைச்சுக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

இதில் 27 பயிலுனர் டாக்டர்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு நியமிக்கப்படுவர்.

இது தொடர்பான விவரங்களை யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகம் சுகாதார மகளிர் விவகார அமைச்சிடம் கோரியுள்ளதாகவும் — இம்மாத இறுதிக்குள் நியமனக் கடிதங்கள் வைத்தியசாலைக்கு கிடைக்கும் என எதிர்பார்ப்பதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-17)

## ஆலயங்களில்

எழுதுமட்டுவாழ் விழுவளை சிவன் தேவஸ்தான திவ்விய சிவருத்திர மகா யாக விழா நாளை முதல் நான்கு தினங்கள் நடைபெறும். [உ-117]

★ ★ ★

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையில் பவளவிழா நாளைமுதல் வெள்ளிக்கிழமை வரை மூன்று தினங்கள் நடைபெறும்; [எ-11]

★ ★ ★

வண்ணை ஸ்ரீவீரமாகாளி அம்மன் ஆலய கும்பாபிஷேக தினவிழா இன்று நடைபெறுகிறது.

காலை 10 மணிக்கு சங்காபிஷேகமும் பி. ப. 3 மணிக்கு நவசக்தி அர்ச்சனையும் இடம் பெறும். [அ]

## நாளை

சாவகச்சேரி தொலைக்கல்வி பிராந்திய நிலையத்தில் பயிற்சி பெறும் ஆசிரிய மாணவர்களையும், போதனாசிரியர்களையும் நாளை காலை 9 மணிக்கு சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள கலந்துரையாடலுக்கு தவறாது சமுகமளிக்கும்படி சாவகச்சேரிக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வேண்டியுள்ளார். (உ-31)

★ ★ ★

வேலணை, ஊர்காவற்றுறைக் கோட்டத்தை சேர்ந்த சகல ஆசிரியர்களுக்கும் தமிழ் சைவசமயம், விஞ்ஞானம், ஆங்கிலம், சங்கீதம், சமூகக் கல்வி, வர்த்தகம், மனையியல் உடற்கல்வி, விவசாயம், ஆரம்பக்கல்வி ஆகிய பாடங்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்பு நாளை புதன்கிழமை முதல் 25 ஆம் திகதி வரை சென். ஜேம்ஸ் அக்கடமியில் நடைபெறும். [உ-3]

★ ★ ★

கல்வி வலயம் I இல் கத்தோலிக்க சமய பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான — முதலாம் தவணைக்கான — சேவைக்கால பயிற்சி வகுப்புகள் நாளை முதல் 24 ஆம் திகதி வரை — தினசரி காலை 8-30 மணி தொடக்கம் 4-30 மணி வரை — சென் சாள்ஸ் ம.வியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கொழும்பு செல்லும் நோயாளர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், ஏப். 19
நாளை மறுதினம் வியாழக்கிழமை கொழும்பு செல்லவிருக்கும் நோயாளர்களை இரண்டு நாட்களுக்குத் தேவையான உணவு, தண்ணீர் ஆகியவற்றுடன் நண்பகல் 13 மணிக்கு யாழ் போதனா வைத்தியசாலைக்கு சமுகமளிக்கும்படி வைத்தியசாலை பணிப்பாளர் கேட்டுள்ளார். (த)

---

அன்னை பூபதிக்கு...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
இணைந்து நடத்துவது -இரவு 7.30 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி மைதானம்.

★ தென்மராட்சிக் கோட்டம் — இரவு 7.30 மணிக்கு மட்டுவில் கமலாசினி வித்தியாசாலை.

★ வடமராட்சிக் கோட்டம் — இரவு 7.30 மணிக்கு அல்வாய் மாலிசந்திப் பிள்ளையார் கோவில் முன்றில்.
(அ-162-17-15-80-51-117)

---

அன்னை பூபதி...
[3ஆம் பக்கத் தொடர்ச்சி]
ஆண்டு 7 சுமிதா எட்மன் யூலியஸ் - சென் தோமஸ் றோக் பெண்கள் பா.

ஆண்டு 7 மேரி பற்றிமா ஜேசுவோறற் சென்தோமஸ் றோக் பெண்கள் பா.

ஆண்டு 8 ஜெகநாதன் வாசுதேவன் - ஹாட்லிக் கல்லூரி.

ஆண்டு 8 பஞ்சகல்யாணி பாலச்சந்திரன் - அல்வாய் சிறீலங்கா வித்தியாசாலை.

ஆண்டு 9 தெய்வகுலேந்திரா உதயதாரன் ஹாட்லிக் கல்லூரி.

ஆண்டு 10 தங்கராசா பிரதீபன் - ஹாட்லிக் கல்லூரி

ஆண்டு 10 நடராசா சந்திரிகாந்தன் - ஹாட்லிக் கல்லூரி.

ஆண்டு 11 தங்கேஸ்வரன் மாறன் ஹாட்லிக் கல்லூரி

ஆண்டு 11 துரைராசா அரவிந்தன் - ஹாட்லிக் கல்லூரி.

ஆண்டு 11 கிருஷ்ணபிள்ளை சுரேந்திரன் - ஹாட்லிக் கல்லூரி.

ஆண்டு 12 சிவப்பிரகாசம் விஜயாலயன் - ஹாட்லிக் கல்லூரி.

ஆண்டு 12 ஜெயச்சந்திரன் முகுந்தன் - ஹாட்லிக் கல்லூரி.

(மிகுதி நாளை வரும்)

---

தொண்டாவிடம்......
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
காங்கிரஸை அரசாங்கம் மோசமான முறையில் நடத்தியதாக தொண்டமான் அப்போது ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

பத்திரிகைகளும் அக்கறையுள்ள சிலதரப்பினருமே பிரச்சினைகளை உருவாக்கினர் என்று ஜனாதிபதி அதற்குப் பதிலளித்தார்.

''எனது மக்களின் கௌரவம் பாதிக்கப்பட்டது. எமது மக்களுக்கு அனைத்துத்துறையிலும் சமத்துவம் வழங்கப்படவேண்டும் அரசாங்கத்தில் உள்ள சிலசக்திகளே இ.தொ.காவுக்குப் பிரச்சினைகளை உண்டாக்கின'' என்று கூறிய தொண்டமான்—

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தற்போதைய அந்தஸ்து தொடர்ந்துபேணப்படவேண்டும் எனறும் வலியுறுத்தினார். (உ-எ)

---

# மரண அறிவித்தல்

## நாகலிங்கம் சிவபாலசிங்கம்

(ஓய்வு பெற்ற ஓவசியர், T O., பட்டினசபை கன்னாகம்)

உடுவிலை பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சிவபாலசிங்கம் காலமாகிவிட்டார்.

இவர் காலம்சென்ற நாகலிங்கம் — பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் செல்வராணியின் அன்புக் கணவரும் சியமளா, சிவகுமார் (கனடா), சர்மிளா (நோர்வே), சசிக்குமார் (பெறியியல் பீடம் மொறட்டுவ பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு தந்தையும் ஜெயக்குமார், தர்சினி (கனடா), அரவிந்தன் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிந்துஜா, வெங்கடேஸ், லக்சிகா (கனடா), சரவணா (கனடா) ஆகியோரின் அன்பு பேரனும் சிவராஜா, சிவமலர், இரத்தினம், இராசமணி, காலம்சென்ற சியானந்தம், அன்னம் ஆகியோரின் சகோதரனும் தம்பிராஜா, சச்சிதானந்தன், நித்தியானந்தன், விவேகானந்தன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்

உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச. சசிக்குமார்
(மகன்)

சங்கரப்பிள்ளை வீதி
மானிப்பாய்
(30479)

## தெற்கில் புதுவருட கைகலப்புகள்; 14பேர் கொலை

கொழும்பு ஏப் 19
புத்தாண்டு காலத்தில் தென்இலங்கையின் பல்வேறு இடங்களில் இடம் பெற்ற கைகலப்பு சம்பவங்களில் 14 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும் சுமார் 100பேர் காயங்களுக்கு உள்ளானதாகவும் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அம்பாந்தோட்டை மாவட்டத்திலேயே கூடுதலான கொலைகள் இடம் பெற்றுள்ளன. (ஒ)

---

சர்வசன......
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஐலண்ட்'' தகவல் வெளியிட்டிருக்கின்றது.

நாட்டில் வன்முறை இடம்பெறுவதால் பொதுத் தேர்தலை நடத்த முடியாதிருப்பதாகக் காரணம் காட்டி 1982 இல் பொதுத் தேர்தல்களுக்குப் பதிலாக சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா தலைமையிலான அரசு நடத்தியதும் —

அந்த வாக்கெடுப்பில் வெற்றியீட்டியதன் மூலம் அப்போது பதவியிலிருந்த ஐ.தே.க. அரசு மேலும் ஒரு ஆட்சிக் காலத்துக்கு பதவியில் நீடிக்க வாய்ப்புக் கிடைத்ததும தெரிந்ததேயே.

இத்தகைய திட்டம் ஒன்றை மீண்டும் செயற்படுத்துவதற்கே யோசனை தெரிவிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுகிறது.

கொழும்பில் அடுத்தடுத்து வெடித்த குண்டு வெடிப்புச் சம்பவங்கள் போன்றவற்றைக் காரணம் காட்டி —

தெற்கிலும் பொதுத் தேர்தல் நடத்த முடியாத பதற்ற நிலை இருப்பதாகத் தெரிவித்து —

பொதுத் தேர்தல்களுக்குப் பதிலாக சர்வசன வாக்கெடுப்பு மூலம் தற்போதைய நாடாளுமன்ற தினதும்ஜனாதிபதியினதும் பதவிக் காலங்களை மேலும் ஓர் ஆட்சிக் காலத்துக்கு நீடிக்க அரசு முயற்சிக்கக் கூடும். (உ-எ)

---

என் கருத்துகள்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
இருப்பேன்.

பழைய நண்பர்கள்

நாம் பழைய நண்பர்கள். ஆகவே பங்காளிகளாகச் செயல்படுவது சாத்தியமானதே'' — என்றும் அவர் கூறினார்.

கேள்வி: பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் இ.தொ.கா. நெருங்கி வருவது போன்ற அபிப்பிராயம் ஒன்றை நீங்கள் ஏற்படுத்தி வந்திர்கள்! பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உங்களுக்கு நலல வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கும் என்று எண்ணுகிறீர்களா?

தொண்டா: நான் ஏற்கனவே ஓர் அரசியல் அணியில் உள்ளேன் ஆகவே இன்னோர் அணியில் நான் சேர வேண்டுமா? இ. தொ. காவுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையேயான கூட்டு கால் நூற்றாண்டு பழைமை வாய்ந்தது ஆகவே அந்த நீண்டகாலக் கூட்டைக் கைவிட்டு பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் சேர மாட்டேன்.

சந்திரிகாவை சந்தித்தேன

சந்திரிகாவை விருந்து ஒன்றில் சந்தித்தேன் கூட்டு வைப்பதுபற்றி அவருடன் பேசவில்லை.

ஜனாதிபதி என்னைச் சந்தித்தபோது பழைய நண்பர்களிடையே தவறான புரிந்துணர்வு இருக்கக்கூடாது என்று தெரிவித்தார் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இருப்பதில் நான் கூடுதல் திருப்தி அடைகிறேன்

எமது கூட்டு இரு சகோதரர்களுக்கு இடையேயான உறவு போன்றதாகும். சகோதரர்கள் ஒருவருடன் ஒருவர் சண்டையிட்டாலும் ஒருப் பிரிந்து விடுவதில்லை. அவர்கள் ஒன்றாக அமர்ந்து பிரச்சினைகளுக்கு தீர்வு காணுகின்றனர்.

அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பு பற்றி சிலர் பேசுகின்றனர் அப்படியானால் நான் இராஜினாமாச் செய்வதா?

நான் புதிய மரபு ஒன்றை நிறுவி வருகின்றேன். அது இப்போது ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது

அரசாங்கத்தை அமைப்பதற்கு நானும் உதவி புரிந்துள்ளேன். அதன் முழுப் பலனை நான் அரசுடன் சேர்ந்து இருந்தே பெற வேண்டும். கோவையான் தான் ராஜினாமாச் செய்து விட்டு போவார்கள் (ஓ-எ)

---

சிறிசேன கூரே நாட்டில் இல்லாத வேளை

# காமினியை எம். பியாக்கும் முயற்சியில் மீண்டும் டி.பி.!

கொழும்பு, ஏப். 19
காமினி திஸநாயக்காவை தேசியப்பட்டியல் எம். பியாக்கி பின்னர் அமைச்சராக்கும் முயற்சியில் மூன்றாவது தடவையாக ஜனாதிபதி விஜேதுங்கா இவ்வாரம் ஈடுபடவிருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக முன்னர் இரு தடவைகள் ஜனாதிபதி விஜேதுங்க மேற்கொண்ட முயற்சிகள் ஐ. தே. க. பொதுச்செயலாளர் சிறிசேன கூரேயின் கடும் எதிர்ப்புக் காரணமாக தோல்வி கண்டன என்றும்—

திரு. கூரே தற்போது வெளிநாடு சென்றிருக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி காமினியை அமைச்சராக்கும் முயற்சியில் விஜேதுங்கா தீவிரமாக ஈடுபட்டுள்ளார் என்றும்—

இதனைத் தடுக்க முயலும் எவர் மீதும் — அவர் எவ்வளவு முக்கியத்துவம் பெற்றிருப்பினும்— 'பெரிய தடி'யைப் பாவிக்கவும் அவர் தயாராகி விட்டதாகவும் உயர் அரசு வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'சண்டே ஐலண்ட்' தகவல் வெளியிட்டிருக்கிறது.

இதன் காரணமாக இந்தோனேஷியாவில் தற்போது பயணம் செய்து வரும் சிறிசேன கூரேயை இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் நாடு திரும்பும்படி கட்சியின் இரு முக்கிய பிரமுகர்கள் அவசர அழைப்பு அனுப்பி இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எப்படியாயினும் திட்டமிட்டபடி ஏப்ரல் 23 இற்கு முன்பு கூரே நாடு திரும்புவாரா என்பது தெளிவாகவில்லை என்றும் கூறப்படுகிறது.

இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முதல் காமினியை எம். பியாகவும் அமைச்சராகவும் நியமிக்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என்றும் —

இதற்காக தேசியப்பட்டியல் எம். பியான அலெக் றொபர்ட்சன் பதவி விலக முன்வந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில்—

ஐ தே. கவில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை அடுத்து —

கோடை விடுமுறைக்கு நுவரெலியா சென்றிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அங்கு சுகாதார அமைச்சர் ரேணுகா ஹேரத் மற்றும் ஐ. தே. கவின் முக்கிய பிரமுகர்கள் சிலருடன் அவசரப் பேச்சுக்களை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ரேணுகா ஹேரத்தும் மற்றும் கட்சிப் பிரமுகர்களும் பிரதமரைச் சந்திக்க வென்றே நுவரெலியா சென்றிருந்தனர் என்றும்—

கொழும்பு திரும்பியதும் பிரதமர் அரசமைப்பு விவகார அமைச்சர் கே. என். சொக்ஸியைச் சந்தித்துப் பேசினார் என்றும் தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை— காமினி திஸநாயக்காவுக்கு நாடாளுமன்றத்தில் இடமளிப்பதானால் அவர் வடமேல்மாகாண சபையின் நிர்வாகத்தை ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைக்கச் செய்யவேண்டும் என்று பிரதமர் கருதுகின்றார்.

இக்கிடையில்- வடமேல் மாகாண சபையின் நிர்வாகம் தொடர்ந்தும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடைய ஆதரவுடனேதான் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி நடத்தும் என்று முதலமைச்சர் ஜி. எம். பிரேமச்சந்திரா தெரிவித்திருப்பது பிரதமரின் எண்ணத்தை நிறைவேற்ற காமினிக்கு தடையாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது;

வடமேல் மாகாண சபையில் உள்ள எட்டு ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக்கட்சி நிர்வாகம் ஏற்படுவதை எதிர்த்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதன் மத்தியில் வடமேல் மாகாண சபையில் நிர்வாகத்தை ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைக்கச் செய்வதற்காக காமினி திஸநாயக்கா மற்றும் முதலமைச்சர் பிரேமச் சந்திரா ஊடாக மேற்கொள்ளப்பட்ட முயற்சி தோல்வியில் முடிவடைந்தது என்றும்—

இதுதொடர்பாக ஜனாதிபதி தலைமையில் நடந்த சந்திப்பு ஒன்றில்—

முதலமைச்சராக பிரேமச்சந்திராவை ஏற்றுக்கொள்ள முடியாதென்ற வடமேல் மாகாண சபையில் உள்ள ஐ. தே. க. உறுப்பினர்கள் தெரிவித்து விட்டனர் எனறும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## அணி அணியாகப் பிக்குகள் அடுத்த மாதத்தில் வருவர்

கொழும்பு, ஏப். 19
யாழ்ப்பாணம் செல்லவிரும்பும் பௌத்த பிக்குகளை மே மாதம் முதல் வாரத்தில் இருந்து அணி அணியாக அங்கு அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டு வருகின்றன.

சர்வமத ஒன்றியத்தின் செயலாளர் வண. டாக்டர் றியன்லி பெரேரா இவ்வாறு தெரிவித்ததாக கொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

திருகோணமலையில் இருந்து கப்பல் மூலமாக பௌத்த பிக்குகளை யாழ்ப்பாணம் அனுப்ப ஏற்பாடுகள் செய்யப் பட்டு வருவதாகவும் —

பிக்குமாரின் இந்த விஜயத்துக்கு அரசு தடை விதிக்காது என்று பிக்குமார் நம்புவதாகவும் அவர் மேலும் சொன்னார்.

யாழ். வரும் பிக்குகள் இங்கு சுமார் பத்து நாட்கள் தங்கி நிற்பர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-த)

## துணைவேந்தர் பீரிஸ் சு. கவில் சேர்கிறார்!

கொழும்பு, ஏப் 19
கொழும்புப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தமது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார் என்று அறிவிக்கப் படுகிறது.

தமது ராஜினாமாக் கடிதத்தை அவர் நேற்றுக்காலை ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்தார்.

சுதந்திரக்கட்சியில் சேர்ந்து தீவிர அரசியலில் ஈடுபடுமாறு திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் திருமதி சந்திரிகா குமாரணதுங்காவும் விடுத்த அழைப்பை ஏற்றுக் கொள்வதற்கு தாம் தீர்மானித்திருப்பதாக பேராசிரியர் பீரிஸ் ஜனாதிபதிக்கு அனுப்பிய பதவிவிலகல் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

பேராசிரியர் பீரிஸுக்கு சுதந்திரக் கட்சியில் உயர் பதவி ஒன்று வழங்கப்படவிருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ-6)

## நச்சு இரசாயனப் பொருள்: இந்தியா மீது கண்டனம் இலங்கை தெரிவிக்கும்

கொழும்பு, ஏப் 19
இராணுவ நோக்கங்களுக்காக நச்சு இரசாயனப் பொருள்களை இஸ்ரேலுக்கு கொழும்பு ஊடாக இந்தியா அனுப்பி வருவதாகவும் —

இது குறித்து இலங்கை அரசாங்கம் இந்தியாவிடம் ஆட்சேபம் தெரிவிக்கலாம் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

அண்மைக் காலத்தில் இந்தியாவுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே ஏற்படுள்ள நெருங்கிய இராணுவ ஒத்துழைப்பைத் தொடர்ந்து —

பம்பாயிலிருந்து கொழும்பு ஊடாக இஸ்ரேலுக்கு நச்சு வாயு ஆயுதங்களைத் தயாரிக்கப்பயன்படுத்தும் இரசாயன பொருள்கள் கப்பல்கள் மூலம் அனுப்பப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் நான்கு கொள்கலன்களில் அனுப்பப்பட்ட நச்சு இரசாயனப் பொருள்கள் கொழும்புத் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டது தெரிந்ததே அதனைத் தொடர்ந்தே இத்தகவல் வெளியாகி உள்ளது (உ-எ)

## ஒரு கோடி ரூபா நஷ்டஈடு கோரி அமைச்சரவைக்கு எதிராக லஞ்ச ஆணையாளர் மனு

கொழும்பு, ஏப் 19
உதவி லஞ்ச ஆணையாளர் விஜய ஹெட்டியாராச்சி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மீறல் வழக்கில் அமைச்சரவை உறுப்பினர்கள் அனைவரும் பிரதிவாதிகளாகக் காட்டப்பட்டுள்ளனர்.

ஒருகோடி ரூபா நட்டஈடு கோரித் தாக்கல் செய்துள்ள இம்மனுவில் பிரதிவாதிகளாக 45 பேர் காட்டப்பட்டுள்ளனர் என்பது தெரிந்ததே.

பிரதி லஞ்ச ஆணையாளராகத் தம்மை நியமிக்காது வேறொருவரை நியமித்தது அரசமைப்புச் சட்டத்தில் உறுதி செய்யப்பட்ட அடிப்படை மனித உரிமையை மீறிய செயல் என்றும் —

இதற்கு நட்டஈடாக 45 பிரதிவாதிகளும் ஒரு கோடி ரூபா நட்ட ஈடு செலுத்த வேண்டும் என்றும் மனுதாரர் தமது மனுவில் கோரியுள்ளார். (உ-எ)

## அரசியல் கொலைகள் மீண்டும் ஆரம்பம்

### சு. க. செயலாளர் கூறுகிறார்

கொழும்பு, ஏப் 19
மாத்தளை மாநகர சபையின் ஐ தே. க. உறுப்பினர் ரஸ்மரி ஹூசேனின் படுகொலையுடன் அரசியல் காரணங்களுக்காக கொலை செய்வது மீண்டும் ஆரம்பித்துள்ளதாக சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில்—

தென்மாகாணசபைத் தேர்தலின் போது பேருவளை பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் கொலை செய்யப்பட்டதும் அரசியல் கொலை ஆரம்பித்துள்ளதைத் தெளிவாகக் காட்டுவதாக தெரிவித்துள்ளார். (உ-6)

## யுனிசெவ் உதவி

யாழ்ப்பாணம், ஏப். 19
யாழ் மாநகரசபையில் கடமையாற்றிவரும் 50 குடும்ப நல சேவையாளர்களுக்கு மேலும் ஒரு வருடத்துக்கு மேலதிக கொடுப்பனவுகளை வழங்குவதற்கு யுனிசெவ் ஸ்தாபனம் முன்வந்துள்ளது.

ஐந்து வருடத்துக்கு இவர்களுக்கு இக்கொடுப்பனவை வழங்குமாறு மாநகர சபை யுனிசெவ் ஸ்தாபனத்திடம் விண்ணப்பித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-162)

## சந்திரிகா வெளிநாடு பயணமானார்

கொழும்பு, ஏப். 19
மேல்மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்கா நேற்று வெளிநாடு பயணமானார் என்று அறிவிக்கப்படுகிறது. (உ-எ-6)

---

கைதிகளைப்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
யும் பலாலியில் தடுத்துவைக்கப்பட்டவர்கள் நலன் குறித்து கேட்டறிவார்.

பலாலி இராணுவ முகாம் அதிகாரிகளுடனும் அவர் பேச்சு நடத்துவார்.

யாழ். அலுவலக தேடுதல் பிரிவு அதிகாரிகள் அவருடன் பலாலிக்கு சென்றுள்ளனர். (உ-8)

## குமுதம் ஆசிரியர் காலமானார்

சென்னை, ஏப் 19
இருதய அறுவை சிகிச்சைக்காக அமெரிக்கா சென்றிருந்த —''குமுதம்'' பத்திரிகையின் நிர்வாக ஆசிரியர்— எஸ். ஏ. பி. அண்ணாமலை அங்கு நேற்றுக் காலமானார்.

செட்டி நாடு, கோட்டையூரில் பிறந்த திரு அண்ணாமலை தமது 23 ஆவது வயதில் குமுதம் இதழைத் தொடங்கினார். அவர் பல சிறுகதைகளையும் தொடர் கதைகளையும் எழுதியுள்ளார்.

அவரின் மறைவு குறித்து பிரதமர் நரசிம்மராவ், தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி ஆகியோர் இரங்கல் செய்திகளை வெளியிட்டுள்ளனர். (உ-ஈ)

## இராமதாஸ் விடுதலை

சென்னை, ஏப். 19
பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் இராமதாஸ் நேற்று மதுரை சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டார்.

கடந்த மாதம் வேலூரில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தச் சென்றிருந்தபோது டாக்டர் இராமதாஸ் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்தார். (உ-எ)

## துணைவேந்தர் நியமனம்

கடந்த ஏப்ரல் முதலாம் திகதி முதல் யாழ். பல்கலைக்கழகத்தின் பதில் துணைவேந்தராகப் பணியாற்றி வந்த பேராசிரியர் கே. குணரத்தினத்தை அத்திகதியிலிருந்து துணைவேந்தராக ஜனாதிபதி நியமித்துள்ளார். (உ-3)

## காலமானார்

யாழ். மாநகர சபையின் உதவி முதல்வராகவும், நீண்டகாலம் உறுப்பினராகவும் பதவி வகித்த திரு. என்.சி. செல்லத்துரை நேற்று முன்தினம் காலமானார்.

மாநகரசபை முதல்வரை பனாகொட முகாமில் தடுத்து வைத்து நிர்வாகத்தை ஸ்தம்பிக்கச் செய்வதற்கு அரசு முயன்ற வேளை, திரு. செல்லத்துரை பதில் மேயராகப் பொறுப்பேற்று அரசின் திட்டத்தை முறியடித்தார்.

யாழ். கூட்டுறவுச் சங்க உபதலைவராகவும் பணியாற்றிய இவர் தமிழரசுக் கட்சியின் நீண்டகால உறுப்பினருமாவார். (அ)

## ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஏப் 19
மண்டைதீவு இராணுவ முகாமில் இருந்து நேற்று நண்பகல் 12.45 மணிக்கு யாழ். கரையோரப்பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

கொட்டடிப்பகுதியில் விழுந்து வெடித்த ஷெல்லினால் கடைக்கட்டிடம் ஒன்று சேதமடைந்தது. இடையிடையே தொடர் துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன. (உ-15-17-51-162)

## நினைவுச் சின்னம்

வட்டுக்கோட்டை, ஏப். 19
மருதனார் மடம் கிறிஸ்தவ சேவா ஆச்சிரமஸ்தாபகர், பெரியண்ணன் எஸ். செல்வரத்தினம் அடிகளாரது நினைவு தினம் சமீபத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. சேவக்சம் அற்பிறட் தலைமையில் நடைபெற்ற வழிபாட்டு விழாவின் வண. சி. ஞானராஜ் அருள் உரை நிகழ்த்தினார்.

## இளைஞர் மரணம்

யாழ்ப்பாணம், ஏப் 19
அராலிக் கடற்பிராந்தியத்தில் கடந்த 12 ஆம் திகதி அதிகாலை 3 மணிக்கு இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இளைஞர் நேற்று அங்கு மரணமானார்.

ஆனைக்கோட்டை சாவற்காட்டைச் சேர்ந்த அழகநாதன் சியாம்சுந்தர் (வயது 18) என்ற இளைஞரே மரணமானவராவார். (உ-15)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லி[illegible] யாழ்ப்பாணம், காவலர் வீதி, 303/8 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 19-04-1994 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org